# புதுக்கோட்டைத்திருக்கோயில்கள் - புதுக்கோட்டை

## அருள்மிகு காசிவிஸ்வநாதர் திருக்கோயில் மற்றும் அருள்மிகு சதாசிவப் பிரம்மேந்திராள் அதிஷ்டானம் (ஜீவ சமாதி)

## நெரூர்

**இருப்பிடம்:-**

கரூர் மாவட்டத்தில் கரூர் திருமக்கூடலூர் சாலையில் 13வது கிலோ மீட்டர் தொலைவில் நெரூர் கிராமத்தில் ஸ்ரீ சதாசிவ பிர்மேந்திரர் ஜீவ சமாதியும், அதற்கு முன்புறம் அருள்மிகு காசிவிஸ்வநாதர் திருக்கோயிலும் அமைந்துள்ளது. மேலும் இந்த ஜீவ சமாதி காவிரிக் கரையில் ஒரு சோலையில் அமைந்துள்ளது. காவிரியாறு இவ்விடத்தில் தெற்கு நோக்கி ஓடுவது மிகவும் சிறப்பான அம்சமாகும்.

**ஸ்ரீ சதாசிவப் பிர்மேந்திரரின் வரலாற்று சுருக்கம்:-**

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு கூடல் மாநகரம் என்று அழைக்கப்படும் சங்கத் தமிழ் வளர்த்த மதுரை மாநகரில் சோமநாத யோகி, பார்வதி தேவி என்ற தெலுங்கு பிராமண குல தம்பதியினர், வாழ்ந்து வந்தனர். இந்தத் தம்பதியினர் நன்மகனைப் பெறுவதற்காக இராமேஸ்வரம் சென்று இராமநாதசுவாமியை பிரார்த்தனை செய்தனர். அருள்மிகு இராமநாதரின் திருவருளால் அறிவும் அழகும் நிரம்பப் பெற்ற ஆண் குழந்தை பிறந்தது. இராமர் சிவனை வழிபட்ட இடமாகிய இராமேஸ்வரத்தில் திருவருள் கிடைத்து குழந்தை பிறந்ததினால் சிவராமகிருஷ்ணன் என்று பெயர் சூட்டினார்கள்.

**இளமைப் பருவமும், கல்வியும்:-**

சிவராமகிருஷ்ணனுக்கு மூன்று வயதாகும் முன்பே இவரது தந்தையாகிய சோமநாத யோகி தவம்புரிய இமயமலை சென்று விட்டார். இளமைப் பருவத்திலேயே சிவராமகிருஷ்ணன் வேதங்கள் நான்கினையும் வெகு சீக்கிரத்தில் கற்று தேந்தார்.

**" முன்னைப் பிறவியில் செய்த முதுதவம்"**
**பின்னைப் பிறவியிற் பெற்றால் அறியலாம்."**

என்ற திருமூலர் வாக்கிற்கு இலக்கணமாக குறுகிய காலத்திலேயே வேதங்களின் உட்பொருள், சாஸ்த்திரங்கள் முதலியவற்றை கற்று தேர்ந்தார்.

பின்னர் திருவிசை நல்லூர் என்ற ஊரில் வசித்து வந்த ஸ்ரீதர வெங்கடேச அய்யாவாள் என்பவர் இடத்தில் சென்று கல்வி கற்க விரும்பி தன் தாயார் பார்வதி தேவியிடம் அனுமதி கேட்டு வணங்கினார். ஆனால் அவரின் தாயாரோ "இன்னும் கொஞ்ச நாட்கள் பொறுத்திரு" என்று கூறியதால் தாயின் வார்த்தைக்கு மறுப்பேதும்

சொல்லாமல் இருந்தார். பன்னிரெண்டு வயது நிரம்பிய பாலகனான சிவராமகிருஷ்ணனுக்கு நல்ல குலத்தில் பிறந்து வளர்ந்த 5 வயதே நிரம்பிய பெண்ணை மணம் செய்து வைத்தார். அதன் பின் தாயாரின் அனுமதி பெற்று திருவிசை நல்லூர் சென்று ஸ்ரீதர வெங்டேச அய்யாவாள் இடத்திலே சென்று சாஸ்த்திரங்களைக் கற்றார். சாஸ்த்திரங்களைக் கேட்கும் பொழுதே அமைதி பெற்று அனுபவத்தின் முதிர்ந்த நிலையை சிவராம கிருஷ்ணன் பெற்றார்.

பின்னர் பெரும் பண்டிதராயிருந்த பரமசிவேந்திரர் அடைக்கலம் புகுந்து தீட்சை பெற்று சதாசிவம் என்னும் பெயர் பெற்றார். தன் குருவே பெருமையுற்று பேசும் அளவிற்கு சிறந்த அறிவு உடையவராகவும், புத்தி கூர்மையுள்ளவராகவும் ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திராள் திகழ்ந்தார்.

**<u>பதவியும், பணியும்:-</u>**

மைசூர் சமஸ்தானத்தின் மகாராஜா சிவராமகிருஷ்ணனின் பெருமைகளைக் கேட்டு அவரது குருவான பரம சிவேந்திரரிடம் அனுமதி பெற்று சிவராமகிருஷ்ணனை அழைத்துச் சென்று மைசூர் சமஸ்தான வித்வானாக ஸ்ரீ சதாசிவ பிர்மேந்திரரை அமர்த்தினார். சமஸ்தானத்திற்கு வரும் வித்வான்களை எல்லாம் தர்க்கம் செய்து எளிதில் வெற்றி பெற்று வந்தார். இவருடைய காலம் இது போல பிறரை வாதத்தில் வெல்வதிலேயே செல்வதை அறிந்த இவருடைய குருவாகிய ஸ்ரீ பரம சிவேந்திரர் “ஊரார் வாயடக்க கற்றுக் கொண்ட நீ உன் வாயை அடக்கக் கற்றுக் கொள்ளாதாது ஏன்? என்று அருளோடு சினந்தார். அதுமுதல் சதாசிவம் மௌன விரதம் மேற்கொண்டு குருநாதரிடம் விடைபெற்ற காடுகளிலும், ஆற்றங்கரைகளிலும் தங்கி உணவு தூக்கம் மறந்து கடுந்தவம் இயற்றினார்.

**தவமும் யோகமும்:-**

தவம் செய்வதற்கு ஏற்ற இடங்களான மக்கள் நடமாற்றம் இல்லாத மலையின் உச்சி, ஆற்றங்கரை, அழகிய அடர்ந்த காடுகள் ஆகியவைகளில் சென்று தங்கினார். காவிரி தெற்கு நோக்கி ஓடும் சிறப்பு வாய்ந்த இடத்தில் ஆற்றங்கரை ஓரமாக கரூர் மாவட்டத்தில் நெரூர் கிராமத்தில் உள்ள ஒரு சோலையில் தவம் செய்தார். இங்கே ஸ்ரீ சதாசிவ பிர்மேந்திரருக்கு மந்திர யோகம், பரிச யோகம், பாவ யோகம், அபாவ யோகம், மகா யோகம் என்ற ஐந்து யோகங்களையும் தவ வலிமையினால் பெற்றார். யோக வலிமையினால் இவருக்கு அஷ்டமாசித்திகளும் கைவரப் பெற்றது. இதனால் ஆகாயத்திலே பறந்தார். பிறர் கண்ணுக்குத் தெரியாமல் போய் வந்து கொண்டிருந்தார். மண்ணுக்குள்ளேயும் புதைந்து கிடந்தார்.

**சித்தரின் சில சித்துக்கள்:-**

கொடுமுடிக்குப் பக்கத்திலே அகத்தியம் பாறை என்ற இடத்தில் உள்ள காவிரி ஆற்றின் நடுவில் ஒரு பெரும்பாறை ஒன்று உள்ளது. அந்தப் பாறையின் மீது ஸ்ரீ சதாசிவ பிரம்மம் அமர்ந்து யாருடைய தொந்தரவும் இல்லாமல் தவம் செய்தார். அப்படிப் பாறை மீது உட்கார்ந்து தவமியற்றும் போது ஒரு முறை காவிரி பெருக்கெடுத்து இவரை உருட்டிக் கொண்டு சென்று மண்ணிலே புதைந்து விட்டது. சில நாட்களில் தண்ணீர் வற்றியவுடன் ஸ்ரீ சதாசிவ பிரம்மத்தை காணாததால் அப்பகுதி மக்கள் பல இடங்களிலும் தேடிப்பார்த்தனர்.

பல நாட்களுக்குப்பிறகு கட்டிடம் கட்ட மணல் வேண்டி சிலர் இந்த ஆற்றில் நல்ல மணல் உள்ள மேடான பகுதியில் வெட்டினர். சற்று ஆழமாகத் தோண்டத் தொடங்கினர். அவ்வாறு தோண்டும் பொழுது மணலில் புதைந்திருந்து ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திரரின் தலையில் மண்வெட்டி பட்டு காயம் ஏற்பட்டு இரத்தம் வரத்தொடங்கியது. பின்னர், அப்பகுதியினர் அவரை மணலில் இருந்து எடுத்து காயத்திற்கு மருந்திட்டு அவருக்கு பழரசங்களும் கஞ்சியும் கொடுத்து உடலைத் தேய்த்து உடலைச் சூடாக்கினர். பின்னர் அவர் தன் நிலை திரும்பி யாருடனும் பேசாமல் புறப்பட்டுச் சென்று விட்டார்.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருவரங்குளம் காடுகளை அடுத்த நிலங்களின் வழியாக ஒரு சமயம் தன் நிலை மறந்து ஸ்ரீ சதாசிவ பிர்மேந்திரார் போய்க் கொண்டிருந்தார். அப்போது அங்கே நெல் அறுவடை முடிந்து வைக்கோல் போர் போடும் வேலை நடந்து கொண்டிருந்தது. அப்போது அங்கே போய்க் கொண்டிருந்த ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திரர் கல் தடுக்கி இரு வைக்கோல் போர்களுக்கிடையே விழுந்து விட்டார். அங்கே வேலை செய்பவர்கள் அவரை கவனிக்காமல் மேலே மேலே வைக்கோல் சுமைகளைப் போட்டனர். ஒரு வருடம் கழித்து வைக்கோல் சுமைகள் குறைந்தவுடன் ஸ்ரீ சதாசிவ பிர்மேந்திரர் எழுந்து நடந்தார். இதைக் கண்ட வேலையாட்கள் மந்திரிகள் மூலம் புதுக்கோட்டை சமஸ்தான மகாராஜா விஜயரெகுநாதத் தொண்டைமான் அவர்களிடம் சொல்லினர்.

மாமன்னர் சாதுக்களிடத்தில் மதிப்பும் மரியாதையும் அன்பும் பக்தியும் உள்ளவர். சாஸ்த்திரங்கள் கற்று உணர்ந்தவர். ஒரு பல்லக்கைக் கொண்டு வரச் சொல்லிவிட்டு ஒரு குதிரையில் தான் மட்டும் விரைந்து ஸ்ரீ சதாசிவ பிர்மேந்திரர் வீற்றிருந்த இடம் வந்து சேர்ந்து அரண்மனைக்கு வர வேண்டும் என்று பிரார்த்தனை செய்தார். ஸ்ரீ பிர்மேந்திரரோ பேசவும் இல்லை. மேலும் முள் மரங்களுக்கிடையே நடந்து சென்று நடுவில் அமர்ந்தார். அரசரும் அருகிலேயே ஒரு சின்ன குடிசை அமைத்துக்கொண்டு அங்கேயே தங்கி அவருக்கு சேவை செய்யத் தொடங்கினார். இடையிடையே அரண்மனைக்கு சென்று அரச வேலைகளையும்,

கவனித்தும் பெரும்பொழுது ஸ்ரீ பிரம்மேந்திரருக்கு சேவை செய்வதுமாக எட்டு வருடங்கள் சென்றன.

ஒரு நாள் அரசர் தமக்கு தீட்சை தர வேண்டுமென சுவாமிகளிடம் விரும்பிக் கேட்டார். சுவாமிகளும் தீட்சை தர விரும்பி ஸ்ரீ தெட்சிணாமூர்த்தி மந்திரத்தை மணிலிலே எழுதிக் காண்பித்தார். மாமன்னர் அந்த மந்திரத்தைக் கற்று கொண்டு அந்த மணலை தன்மேல் துண்டில் எடுத்துக் கொண்டு அரண்மனைக்கு வந்து தங்கப் பேழையில் வைத்து பூஜை செய்து வந்தார். பிறகு சுவாமிகளின் உத்தரவுப்படி உத்தமர் கோயிலில் உள்ள கோபாலகிருஷ்ண சாஸ்திரிகளை அரச சபைக்கு அழைத்து வந்து வேண்டிய சன்மானங்கள் கொடுத்து அரண்மனையிலேயே வைத்துக் கொண்டு சாஸ்திரப் பாடங்களை கேட்டுத் தெரிந்து கொண்டார். எங்கு சென்றாலும் எப்படியும் தன் சரீரத்தை உகுக்கும் காலத்தை தனக்கு தெரிவிக்கவேண்டும் என்று மாமன்னர் சுவாமிகளிடம் ஆழ்ந்த பக்தியுடன் பிரார்த்தனை செய்து வேண்டிக் கொண்டார். சில நாட்களில் ஸ்ரீ சதாசிவ பிர்மேந்திரர் அங்கிருந்து புறப்பட்டுப் போய்விட்டார்.

கரூரில் வசித்து வந்த சாஸ்திரிகளும், கனபாடிகளும் ஒரு சமயத்தில் சுவாமிகளிடம் திருப்பதி சென்று வெங்கடாசலபதியைத் தரிசித்து வருவது மிகவும் சிரமமாக உள்ளது என்றும், அதனால் திருப்பதி பெருமானை தரிசித்தால் என்ன பலன் கிடைக்குமோ அந்தப் பலனை கரூருக்கு அருகில் உள்ள தான்தோன்றிமலை பெருமாளை வழிபட்டால் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று சுவாமிகளிடம் பிரார்த்தனை செய்து கொண்டார்கள். ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திரரும் மகிழ்ச்சியோடு தான்தோன்றிமலை சென்று அங்கு குடிகொண்டிருக்கும் பெருமாளை பூஜித்து ஜன ஆகர்ஷன சக்கரம் ஒன்று எழுதி பூஜை செய்து அங்கு அமைத்தார். புரட்டாசி மாதம் 3-வது வாரம் சுவாமிகள் தான்தோன்றிமலை அருள்மிகு கல்யாணவெங்கட்ராமன் சுவாமிக்கு பூஜை செய்த நாளை ஒவ்வொரு வருடமும் மக்கள் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்.

தஞ்சாவூருக்கு அருகில் 3 கல் தொலைவில் புன்னை வனக்காடுகள் இருந்தன. அந்தக் காடுகளில் ஸ்ரீ பிரம்மேந்திர சுவாமிகள் அமர்ந்து தவம் செய்து கொண்டிருந்தார். தஞ்சாவூர் மகாராஜா தன் பெண் குழந்தையுடன் இராமேஸ்வரம் சென்று திரும்பும்பொழுது உஷ்ணத்தின் காரணமாக குழந்தையின் கண்களிலிருந்து இரத்தம் வந்தது. பல மருத்துவர்கள் சென்று பார்த்தும் குணமடையவில்லை. எனவே மகாராஜா சமயபுரம் மாரியம்மனுக்கு குழந்தையின் கண்கள் குணமானால் தங்கத்தால் கண் செய்து வைப்பதாக வேண்டிக் கொண்டார். அன்று இரவே மகாராஜாவின் கனவில் “நான் இங்கிருக்க நீ சமயபுரம் போவதென்ன”? என்று அம்மன் அருளினாள் மகாராஜா விழித்துக் கொண்டு மந்திரி பிரதானிகளைக்

கொண்டு அம்மன் இருக்கும் இடத்தை கண்டுபிடிக்க நான்கு பக்கங்களுக்கும் அனுப்பி வைத்தார்.

ஓர் இடத்தில் சிறு குழந்தைகள் ஒரு புற்றுக்கு வேப்பிலை வைத்து மாரியம்மன் பெயர் சொல்லி விளையாடிக் கொண்டிருந்தார்கள். இதை மகாராஜாவிடம் போய் கூறினார். மகாராஜாவும் அந்த புன்னைமரக் காடுகளை சுற்றி வந்தார். அப்போது ஒரு புன்னை மரத்தடியிலே சுவாமிகள் வீற்றிருப்பதைக் கண்டார். கண்டவுடன் விழுந்து வணங்கி அவரிடம் தான் கனவில் கண்டதைச் சொன்னார். மேலும் அவரிடம் இங்கு மாரியம்மன் இருக்கும் இடத்தையும் கேட்டார். சுவாமிகளும் குழந்தைகள் விளையாடிக் கொண்டு இருக்கும் புற்று தான் மாரியம்மன் என்று கூறினார். புற்றை வழிபாடு செய்வதற்கு இயலாது என்றும் உருவம் வகுத்துக் கொடுக்க வேண்டும் என்று மகாராஜா பிரார்த்திதார். சுவாமிகள் மகாராஜாவிடம் சாம்பிராணி, புனுகு, ஜவ்வாது, கஸ்தூரி, கோரோசனை அகில் சந்தனம், குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம் ஆகிய பொருட்களைக் கொண்டு வரச் சொல்லி அந்த மண்ணிலேயே அஷ்டகந்தம் எனப்படும் இந்த எட்டுப் பொருள்களையும் இட்டு பிசைந்து மாரியம்மனைச் செய்தார். ஜன ஆகர்ஷண சக்கரம் ஒன்று எழுதி அம்மன் முன்னால் வைத்து இதைப் பூஜை செய்ய குழந்தைக்கு குணமாகும் என்று கூறினார். அவ்வாறே குழந்தையும் கண்நோய் நீங்கி குணமடைந்தது இன்றும் இந்த அம்மனுக்கு 5 வருடங்களுக்கொருமுறை சாம்பிராணித் தைல அபிஷேகம் நடத்தி வருகின்றார்கள்.

ஒரு சமயம் வழக்கம்போல் தன்னிலை திகம்பரராய் அரண்மனைக்குள் நுழைந்து அரசன் முன்னிலையில் அந்தப்புரம் நோக்கி நடந்து கொண்டிருந்தார். தன்னிலை மறந்து செல்லும் சுவாமிகளை அவர் பெருமை தெரியாது அரசர் ஆத்திரம் கொண்டு இடைவாளால் ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திரரின் கைகளை வெட்டிவிட்டான். ஒரு கை கீழே விழுந்துவிட்டது. மற்றொரு கை பாதி ஒட்டிக்கொண்டிருந்தது. வெட்டுப்பட்ட இடங்களிலிருந்து இரத்தம் ஆறாக ஓடி கொண்டிருந்தது. சுவாமிகள் இதெல்லாம் உணராது ஏதோ ஒன்று தடைபட்டதுபோல் உணர்ந்து வந்த வழியே திரும்பி நடந்தார். மௌனமாக யாதொரு குறிப்பும் இன்றி செல்லும் இவரைக் கண்ட அரசன் “யாரோ ஒரு பெரிய மகான் இவருக்கு அபராதம் செய்துவிட்டேன்” என்று உணர்ந்து இவரிடம் மன்னிப்பு கிடைத்தாலின்றி உயிரோடு இருப்பதில்லை என்று எண்ணங்கொண்டு கீழே விழுந்த சுவாமிகளின் கையை எடுத்துக் கொண்டு சுவாமிகளின் திருவடிகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு மன்னிப்பு வேண்டி அலறி அழுதான். உணர்வு பெற்று அரசன் செய்கையை உணர்ந்து மன்னித்து கீழே விழுந்த கரத்தை இருந்த இடத்தில் பொருத்திக் கொண்டார். கரங்கள் மாசுமறுவின்றிக் விளங்கின. ஒன்றும் அறியாதவர் போல் மறைந்து விட்டார்.

இந்நிகழ்ச்சி நடந்த உடன் நாம் மன்னித்துவிட்டால் அரசன் செய்த வினையின் பயனை அடுத்த பிறவியிலேனும் அனுபவிக்க நேருமே அப்பேற்பட்ட பாவத்தினை அனுபவிப்பதற்கு ஏதுவாக இருக்கும் நம் உடலை மறந்து நாம் ஏன் திரிய வேண்டும் தன் உடலை உகுக்க (ஜீவ சமாதி) எண்ணம் கொண்டு நெரூர் வந்து சேர்ந்தார்.

புதுக்கோட்டை மாமன்னர்களின் அரச குலகுருவாக விளங்கிய ஸ்ரீ சதாசிவ பிர்மேந்திரர் ஒரு சமயம் பிரகதாம்பாள் கோயிலில் அர்ச்சனை செய்யும் போது ஒவ்வொரு மந்திரத்திற்கும் ஒவ்வொரு புஷ்பமாக அருள்மிகு பிரகதாம்பாள் திருவடியில் உதிர்ந்தது. மற்றொரு முறை சுவாமிகள் அம்பாளுக்கு கனகமணி மாலையணிவித்துள்ளார். மாலையில் நாயக மணியில் “பிரகதாம்பாள் சரணசேகர சதாசிவம்” என்று எழுதப்பெற்றிருக்கிறது. கனகமணி மாலை பிரகதாம்பாள் கோயில் ஆபரணங்களில் சிரோரத்தினமாகத் திகழ்கிறது. புதுக்கோட்டை மகாராஜாவிற்கு சுவாமிகள் தீட்சை மந்திரம் எழுதிக் காண்பித்த மணலை இன்றும் புதுக்கோட்டை அரண்மனையில் ஆராதனை செய்து வருகின்றார்கள். மேலும் புதுக்கோட்டை மாமன்னர் விஜயரெகுநாத தொண்டைமான் ஆழந்த குருபக்தி உடையவராய் இருந்ததால் ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திரர் சுவாமிகளுக்கு உருவச் சிலை செய்து தங்கள் குலக்கோயிலாக விளங்கும் அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயிலில் வைத்து பூஜை செய்து வந்தார். இன்றும் புதுக்கோட்டை தேவஸ்தானதினரால் சுவாமிகளுக்கு பூஜை நடத்தப்பட்டு வருகின்றது.

ஸ்ரீ சதாசிவ பிர்மேந்திரர் நிகழ்த்திய சித்திகளில் நாம் அறிந்து கொண்டவை ஒரு சில நிகழ்ச்சிகள் தான். நாம் அறியாமல் அவர் நிகழ்திய அற்புதங்கள் எத்தனையோ? சுவாமிகளிடம் அன்புகொண்ட குழந்தைகள் மனம் மகிழ்ச்சியுறும் வண்ணம் அவர்களை கண்ணிமைக்கும் நேரத்தில் மதுரை மாநகருக்கு அழைத்துச் சென்று விழாவினை காணச் செய்து குழந்தைகளை திரும்ப அழைத்துக் கொண்டு வந்ததும், நோயினால் பெருந்துயர் அடைந்த அன்பர் பலரை தம் அருட்பார்வையால் நோய் நீங்கி மகிழ்வித்தும் தம்மைக் தாக்க வந்த அறிவிலிகளை செயலற்ற மரம் என நின்று விடச் செய்ததுமான பல அற்புதங்கள் செய்தார். இப்படியாக ஸ்ரீ சதாசிவ பிர்மேந்திரர் செய்த சித்திகள், சொற்களிலும் ஏட்டினிலும் அடங்காது என்றாலும் சித்திகளில் பற்று இல்லாதவராக இருந்தார். ஜீவ சமாதி அடைய எண்ணி கடைசியில் நெரூர் வந்து சேர்ந்தார்.

**ஜுவ சமாதி அடைதல் :-**

காவிரி ஆறு தெட்சிணமாக (தெற்கு) ஓடும் சிறப்பைக் கொண்ட ஊராகிய நெரூரில் ஜீவ சமாதி அடைய எண்ணம் கொண்டு நெரூருக்கு வந்து சேர்ந்தார். நெரூர் வந்து சேர்ந்தவுடனே யோக வலிமையினால் தமது சீடர்களான புதுக்கோட்டை மகாராஜா, மைசூர் மகாராஜா, தஞ்சாவூர் மகாராஜா மூவரையும் மனதால் நினைத்தார். மூவரும் விரைவாக வந்து சேர்ந்தன. தமது முதன்மையான சீடரான புதுக்கோட்டை மாமன்னர் விஜயரகுநாதத் தொண்டைமானிடம் குகை அமைக்க

சொன்னார். திருமூலர் திருமந்திரத்தில் ஜீவ சமாதி அடைய குகை அமைக்கும் முறையினை கூறியுள்ளதை மகாராஜாவிடம் கூறி அதன்படி குகை அமைக்கவும் உட்காரும் போது போட வேண்டிய பொருட்களையும் குகையை மூடம் முறையையும் தெரிவித்தார். மகாராஜா தொண்டைமான் உயிரோடு குருநாதர் உடலை மண்ணால் மூடுவதற்கு மனம் இல்லாமல் தாங்கள் இப்படியே எங்களுக்கு தரிசனம் தந்து கொண்டு இருந்தால் மகிழ்ச்சியோடு இருப்போம் என்று பிரார்த்தனை செய்தார். அதற்கு சுவாமிகள் முன்பொரு நாள் காவிரி மணலில் இவ்வுடல் புதைந்து கிடைக்கவில்லையா? என்றும் இவ்வுடலை குகையில் வைத்து மூடுவதால் நான் மரணமடைந்துவிட மாட்டேன் என்று ஆறுதல் கூறினார்.

ஸ்ரீ சதாசிவ பிர்மேந்திரர் குறிப்பிட்ட நேரத்தில் சமாதிக் குகையில் உட்கார்ந்து கொள்வேன். பின் விபூதி, உப்பு, மஞ்சள், கற்பூரம், செங்கல்பொடி போட்டு குகையை மூடிவிடும்படியும், சமாதியடைந்த நாளிலிருந்து ஒன்பதாம் நாள் சிரசின் மேல் வில்வ விருட்சம் தோன்றும் என்றும் 12-ம் நாள் காசியிலிருந்து ஒரு பிரம்மச்சாரி சிவலிங்கம் கொண்டு வருவார் என்றும், அந்த லிங்கத்தை வில்வமரத்திற்கு பன்னிரெண்டு அடி கீழ்புறம் பிரதிஷ்டை செய்து கோயில் அமைத்து ஆகம விதிகளின்படி பூஜைகளை நடத்தலாம் என்றும் கூறினார். வில்வமரத்தின் நான்கு புறமும் திறந்த வெளியாகவே இருக்கட்டும் என்றும் கூறினார்.

சுவாமிகள் தாம் கூறியபடி குறிப்பிட்ட நாளில் குகையில் வந்து அமர்ந்துவிட்டார். அந்நாளுக்குள்ளாகவே மகாராஜாக்கள் வேண்டிய பொருட்களை சேகரித்துக் கொண்டார்கள். பக்த பெருமக்கள் பெருந்திரளாகக் கூடியிருக்க விபூதி, உப்பு, மஞ்சள்பொடி, கற்பூரம், கற்பொடி முதலிய பொருட்களைப் போட்டு குகையை மூடினார்கள். சுவாமிகள் கூறியபடியே 9-ம் நாள் வில்வமரம் தோன்றியது. 12-ம் நாள் காசியிலிருந்து சிவலிங்கம் வந்து சேர்ந்தது. சுவாமிகள் கூறியபடியே வில்வமரத்திற்கு 12 அடிக்கு கீழ்புறம் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து கோயில் கட்டினார்கள். புதுக்கோட்டை மகாராஜா குருநாதர் உத்தரவின்படி வில்வமரத்தை பாதுகாக்க எண்ணி மரத்தை சுற்றி திருமதில்கள் அமைத்தார் நித்திய பூஜைகள் நடக்கவும் ஏற்பாடு செய்தார்.

சுவாமிகள் நெரூரில் சமாதி அடைந்த அதே நேரத்தில் மானாமதுரை, கராச்சி ஆகிய இரு இடங்களிலும் ஜீவ சமாதி அடைந்ததாக கூறப்படுகிறது. ஒரே சமயத்தில் மூன்று இடங்களில் மூன்று உடல்கள் என்று கூறப்படும் ஸ்தூல உடல், சூட்சும உடல், காரண உடல் ஆகிய உடல்களை உகுத்துள்ளார் என்று கூறப்படுகிறது. பிரதானம் நெரூராகும்.

ஸ்ரீ சதாசிவ பிர்மேந்திரர் உடல் மறைந்து சுமார் 250 வருடங்கள் ஆகியிருக்கும் நிலையில், இன்றைக்கு சுமார் 100 வருடங்களுக்கு முன் சிருங்கேரி ஸ்ரீ

சாரதா பீடத்தில் ஜகத் குருவாக இருந்த சச்சிதானந்த சுவாமி நரசிம்ம பாரதி மகாசுவாமிகள் தனக்குற்ற ஐயத்தை நீக்கிக் கொள்ள நெரூருக்கு யாத்திரையாக புறப்பட்டார். வழியில் மகாதானபுரத்தில் சில தினம் தங்கி நெரூர் வரும் வழியில் அரங்கநாதம்பேட்டை என்றும் கிராமத்துக்கு வடக்கு நோக்கி வரும் போது பல்லக்கு சுமந்து வரும் போகிகள் நடக்க முடியாமல் பின்னுக்கு நகர்ந்தனர். ஆச்சர்யமடைந்த சுவாமிகள் விரைந்து செல்லுங்கள் என்று கூறினார். சுவாமிகள் பல்லக்கு விட்டு உடனே இறங்கி இரண்டு மைல் தூரம் கீழே விழுந்து கும்பிடுவதும் பின் நடப்பதுமாக இப்படியாக இரண்டு மைல் தூரம் நடந்து பிர்மேந்திராள் அதிஷ்டானத்தை அடைந்து தன் ஐயம் நீங்கும் என்று நிச்சயத்துடன் மூன்று நாட்கள் இரவும் பகலும் ஜீவ சமாதியின் முன்னிலையில் உட்கார்ந்து தியானத்தில் ஆழ்ந்தார். மூன்றாம் நாள் இரவு இவர் வினாக்களுக்கு யோக வலிமையினால் ஸ்ரீ சதாசிவ பிர்மேந்திரர் விடையளித்தார். உடனே சச்சிதானந்த சுவாமிகள் ஸ்ரீ சதாசிவ பிர்மேந்திரரை 45 சுலோகங்களால் துதித்தார். இன்றும் சதாசிவ பிர்மேந்திரரின் திருவுருவத்தில் அவருடைய கீர்த்தனங்களை தியானித்து துதிப்பவர்கட்கு எல்லா நலன்களும் கைகூடும் என்பது சர்வ நிச்சியமான ஒன்றாகும்.

எங்கும், எல்லாப் பொருள்களிலும் நிறைந்து நிற்பது ஸ்ரீ சதாசிவ பிரம்மம் இந்த அதிஷ்டானம் மிகச் சிறப்பு வாய்ந்தது ஆகும் ஸ்ரீ சதாசிவ பிர்மேந்திரரை தியானம் செய்து வழிபடுபவர்களுக்கு அவர்கள் விரும்பிய நலன்கள் கிடைக்கப்பெறும் என்பது அனுபவ பூர்வமான உண்மை. ஸ்ரீ சதாசிவ பிர்மேந்திராளுடைய ஜீவ சமாதியை வலமாக வந்து நமஸ்காரம் செய்கின்றவர்களுக்கு எல்லா நலன்களும் கிடைக்கும்.

## <u>கீர்த்தனைகள்:</u>

ஸ்ரீ சதாசிவ பிர்மேந்திரர் 20க்கும் மேற்பட்ட கீர்த்தனைகள் இயற்றியுள்ளார். தன் கீர்த்தனங்களில் ஸ்ரீ ராமநாமத்தின் மகிமையையும், அதைச் சொல்வதினால் ஏற்படும் நன்மையையும் இந்த அகண்ட உலகத்தில் சர்வமும் பிரம்ம மயம் என்றும் கூறியுள்ளார். இந்த கீர்த்தனங்களை பொருள் விளங்கி மன அமைதியுடனும், பக்தியுடனும் பாடுவர்களுக்கு சகல விதமான நன்மைகளும் பெருகும் என்பது திண்ணம்.

## <u>சிறப்பு வழிபாடுகள்:</u>

1. **சங்கர ஜெயந்தி:**

சித்திரை மாதம் சங்கர ஜெயந்தியன்று காலையில் பூஜை ஆரம்பித்து 5-வது நாளன்று ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திராள் ஜீவ சமாதிக்கு தீப ஆராதனை பூஜையும், அன்னதானமும் வெகு சிறப்பாக நடைபெறுகிறது.

**2. சித்ரா பௌர்ணமி:**

சித்ரா பௌர்ணமி அன்று காலை ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திராள் மற்றும் காசிவிஸ்வநாதர், விசாலாட்சி கோயிலில் சிறப்பு அபிஷேகம், ஆராதனை மற்றும் அன்னதானங்கள் மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது.

**3. பௌர்ணமி பூஜை:**

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி நாளன்று காலையில் சிறப்பு வழிபாடும் அன்னதானமும் நடைபெறுகிறது.

**4. பிரதோஷ வழிபாடு:-**

நெரூரில் கோயில் கொண்டிருக்கும் அருள்மிகு காசிவிஸ்வநாதர் திருக்கோயிலில் ஒவ்வொரு மாதமும் இரண்டு பிரதோஷங்களில் மிகச் சிறப்பாக பிரதோஷ வழிபாடு ஆராதனை நடைபெறுகிறது.

5. **வியாச பௌர்ணமி:-**

ஒவ்வொரு வருடமும் ஆனி மாதம் வியாச பௌர்ணமி பூஜை வெகு விமர்சையாக நாள் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

## நினைத்த காரியம் நிறைவேற

ஒவ்வொரு வியாழக்கிழமையும் ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திரரின் ஜீவ சமாதியை சுற்றிவர நெய்தீபம் ஏற்றி வழிபட்டால் நினைத்த காரியம் கைகூடும் என்பது அனுபவ பூர்வமாக கண்ட உண்மை. மன நம்பிக்கையுடனும், உறுதியுடனும், இவ்வழிபாட்டை செய்தால் நிச்சயம் பலன் கிடைக்கும் என்பது உறுதி.

மேலும் இங்கு கோயில் கொண்டிருக்கும் அருள்மிகு விசாலாட்சி உடனுறை காசிவிஸ்வநாதரை வழிபட்டால் காசிக்குச் சென்று வந்த பலன் உண்டு என்பது இத்திருக்கோயிலின் சிறப்பம்சம்.

தினசரி காலை 8 மணிக்கும், மாலை 4 மணிக்கும் நெரூர் சதாசிவ பிரம்மேந்திரர் அதிஷ்டானத்தில் தீப ஆராதனை நடைபெறுகிறது. மன அமைதி வேண்டி தியானம் செய்வதற்கு நெரூர் அதிஷ்டானம் ஏற்ற இடமாக இருப்பதால் மன அமைதி வேண்டுவோர் இங்கு வந்து தியானம் செய்து வருவது சிறப்பாகும்.

தீராத வியாதிகள் நீங்கவும், வாழ்க்கையில் துன்பங்கள் நீங்கி வளம் பெறவும், மன அமைதி பெறவும், பிறவித் துன்பம் நீங்கவும், வேறெங்கும் இல்லாத சிறப்பு அம்சமாக காவிரி தெற்கு நோக்கி ஓடும் பெருமை கொண்ட சோலையில் ஜீவ சமாதி அடைந்திருக்கும் ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திரரின் அதிஷ்டானத்திற்கு வந்து மனமார நம்பிக்கையுடன் வழிபட்டால் அவரவர்கள் விரும்பிய பலன்கள் கிடைக்கும் என்பது திண்ணம்.

**"ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திரரின் திருவடிகளே சரணம்"**